


# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

10 ஆண்டுகள் 22.02.2001 22.02.2011

**Online Newspaper in Tamil** **Vol.10** **26.12.2012**



முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
அதிரடி
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN


## புலிகளின் வதை முகாமில் எனது அனுபவம் - தொடர் - 79

புலிகள் எமது அடிப்படைகளில் கைவைக்க ஆரம்பித்து விட்டனர்!

அடுத்த சில நாட்களில் எமது தோழர்களில் மேலும் சிலர் புலிகளால் எமது சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்களில் ஒருவர் கதிர்காமநாதன் என்னும் தோழர். வடமராட்சி கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த அந்தத் தோழரின் தகப்பரானான காலஞ்சென்ற வல்லிபுரம் ஓவசியரும் எமது கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிரமான ஒரு ஆதரவாளர். தகப்பனாரின் வழியில் மகனும் எமது கட்சியில் இணைந்து கொண்டவர்.

முழுநேரக் கட்சி ஊழியராகத் தன்னை இணைத்துக் கொண்ட தோழர் கதிர்காமநாதன், சிறிது காலம் அக்கிராயன் - கோணாவில் பகுதியில் அமைந்திருந்த எமது முகாமில் அரசியல் பயிற்சி எடுத்த பின்னர், பரந்தன் முல்லைத்தீவு வீதியில் அமைந்திருக்கும் தருமபுரம் மற்றும் சுதந்திரபுரம் குடியேற்றக் கிராமங்களில் கட்சி வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்தார். கடுமையான உடல் உழைப்பாளியாகிய அவர், துணிச்சலுடனும் செயற்படக் கூடியவர்.

இந்த இடத்தில் பின்னணித் தகவல்களாகச் சில விடயங்களைக் கூறிவிட்டுத் தொடரலாம் என எண்ணுகிறேன். 1966 ஜனவரியில் நான் பாடசாலை படிப்பைத் துறந்துவிட்டு முழுநேரக் கட்சி ஊழியராக வேலைகள் செய்யப் புறப்பட்ட பொழுது, எமது சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவத் தோழர்களில் மேலும் இருவர் என்னைப்போலப் படிப்பைத் துறந்துவிட்டு கட்சி முழுநேர ஊழியர்களானார்கள். அவர்களில் ஒருவர் பிற்காலத்தில் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தில் கிளிநொச்சியில் பணி புரிந்த நா.யோகேந்திரநாதன். இன்னொருவர், பின்னர் எமது கட்சியை விட்டு நீங்கி முதலில் புளொட் இயக்கத்துடனும், பின்னர் புலிகளுடனும், இறுதியாக ஈ.என்.டி.எல்.எப்புடனும் (இப்போதைய நிலை என்னவென்னு தெரியாது) வேலை செய்த அ.கௌரிகாந்தன்.

நான் 1966இன் ஆரம்பத்தில் கிளிநொச்சிக்குச் சென்று, எமது கட்சியின் தலைமையிலான அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் கிளையொன்றை முதன்முறையாக உருத்திரபுரத்தில் அமைத்து செயல்பட்டுக் கொண்டிருந்த தோழர் வீ.தியாகராசா அவர்களுடன் இணைந்து செயற்படத் தொடங்கினேன்.

கௌரி காந்தன் எம்முடன் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி கற்ற வவுனியா பூவரசங்குளம் கிராமத்தைச் சேர்ந்த வி.பரம்சோதி (ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இராஜ குகனேஸ்வரனின் தாய் மாமன்) என்ற தோழரின் தொடர்பைப் பயன்படுத்தி வவுனியாவில் கட்சி அமைப்பு வேலைகளை ஆரம்பித்துச் செய்ய அங்கு சென்றார்.

நா.யோகேந்திரநாதன் சுன்னாகத்தில் கட்சிக் காரியாலயம் ஒன்றைத் திறந்து அங்கு கட்சியின் முழுநேர ஊழியராகச் செயற்பட்டு வந்தார். அவர் அங்கு முழுநேர ஊழியராக இருந்த காலத்தில்தான், கட்சி தீண்டாமைக்கு எதிரான தனது சரித்திரப் பிரசித்தி வாய்ந்த 1966 ஒக்ரோபர் 21ஆம் திகதி ஊர்வலத்தை பொலிஸ் தடையை மீறி சுன்னாகத்தில் இருந்து தொடங்கி நடாத்தியது. அந்த ஊர்வலத் தயாரிப்புகளில் ஈடுபட்டுவிட்டு சுன்னாகம் கட்சிக் காரியாலயத்தில் நாம் மூவரும் இரவு தங்கியிருந்த நேரத்தில்தான் நானும், யோகேந்திரநாதனும் சுன்னாகம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு, ஒரு இரவு முழுவதும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வைத்துத் தாக்குதலுக்கு உள்ளானோம்.

யோகேந்திரநாதன் பின்னர் 1967ஆம் ஆண்டில் கிளிநொச்சியில் விவசாயிகள் சங்க வேலைகளை முன்னெடுப்பதற்காக என்னுடன் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்து கொண்டார். நானும் யோகேந்திரநாதனும் கிளிநொச்சியின் பட்டிதொட்டியெங்கும் ஒரு பழைய சைக்கிளில் (இந்த சைக்கிளை அப்பொழுது எமக்கு அன்பளிப்பாகத் தந்து உதவியவர் அரியாலையைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரித் தோழரும், பிற்காலத்தில் லண்டனில் வாழும் எழுத்தாளர் இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் அவர்களைத் திருமணம் செய்தவருமான பாலசுப்பிரமணியம் ஆகும்) ஓடித் திரிந்து, அப்பொழுது கட்சியின் வாரப் பத்திரிகையாக கொழும்பிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'தொழிலாளி' பத்திரிகையை விற்பனை செய்ததுடன், விவசாயிகளின் தொடர்புகளை ஏற்படுத்தி அநேகமாக எல்லாக் குடியேற்றக் கிராமங்களிலும் எமது அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனக் கிளைகளை நிறுவினோம்.

அந்த விவசாயிகள் சங்கக் கிளைகள் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்தின் பல்லாயிரக்கணக்கான ஏழைக் குடியேற்ற விவசாயிகளுடன் எமக்கு நேரடித் தொடர்பு ஏற்பட்டது. விவசாயிகள் எம்மைத் தமது சொந்தப் பிள்ளைகள் போலக் கருதி நடாத்தினார்கள். கிளிநொச்சி நகரில் எமக்குக் கட்சிக் காரியாலயம் ஒன்று இருந்தபோதிலும், எமது பெரும்பாலான நேரங்கள் விவசாயிகளின் இல்லங்களிலேயே கழிந்தது. நாம் உண்டதும் உறங்கியதும் அவர்களது இல்லங்களிலேயே.

நாம் அங்கு பொதுவாக கிளிநொச்சிப் பகுதி விவசாயிகள் எதிர்நோக்கிய நீர்ப் பிரச்சினைக்காகவும், நிலமற்ற கூலி விவசாயிகளின் நிலப் பிரச்சினைக்காகவும், அவர்களின் போக்குவரத்துப் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்காகவும் அயராது போராடினோம். ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள், அரச காரியாலயங்களை முற்றுகையிடல், மகஜர்கள் கையளிப்பு, பேச்சுவார்த்தைகள் என எமது போராட்டங்கள் பல வடிவங்களில் அமைந்திருந்தன. அதன் காரணமாக எமது விவசாயிகள் சங்கத்துக்கும், கட்சிக்கும் கிளிநொச்சிப் பிரதேச மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு ஏற்பட்டது.

அதன் காரணமாக, நாம் 1969இல் கிளிநொச்சி ஈஸ்வரன் தியேட்டரில் நடாத்திய பிரமாண்டமான விவசாயிகள் மாநாட்டுக்கும், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கும், முடிவாக கிளிநொச்சி றொட்றிக்கோ (பிற்காலத்தில் கிளிநொச்சி முற்றவெளி) மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம், கலை நிகழ்ச்சிகள் என்பனவற்றுக்கும் கிளிநொச்சியின் வரலாறு காணாத மக்கள் கூட்டம் திரண்டு வந்திருந்தது. அந்தத் தாக்கத்தின் காரணமாக 1970இல் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரான காலத்தில் வெளிவந்த கொழும்பு பத்திரிகை ஒன்று, எமது கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளராக இருந்த நா.சண்முகதாசன் கிளிநொச்சித் தொகுதியில் தேர்தலில் போட்டியிடக்கூடும் என ஆரூடம் வெளியிட்டது.

அதுமாத்திரமின்றி, அத்தேர்தலில் கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிட்ட சில அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், அத்தேர்தலில் தமக்கு ஆதரவு தரும்படி கோரி சண்முகதாசனுக்கு கடிதங்களும் எழுதினார்கள். ஆனால் அத்தேர்தலைக் பகிஸ்கரிப்பது என்ற நிலைப்பாட்டைக் கட்சி மேற்கொண்டிருந்தது. அதன் விளைவாக அத்தேர்தலில் கட்சியின் வேண்டுகோளை ஏற்று, கிளிநொச்சித் தொகுதியில்தான் ஆகக் கூடுதலான மக்கள் தேர்தலைப் பகிஸ்கரித்தார்கள்.

இந்தத் தேர்தலில்தான் இன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி முதல் தடவையாக வெற்றியீட்டினார். தேர்தல் முடிவு வந்த அன்று எமது பகிஸ்கரிப்பால்தான் தமக்கு விழ வேண்டிய பல வாக்குகள் விழாமல் போய், ஆனந்தசங்கரியால் வெற்றி பெற முடிந்தது (ஆனந்தசங்கரி சுமார் 600 வாக்குகள் வித்தியாசத்தில்



Yarl TV Live


புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

BBC
Newsnow

தமிழரசுக்கட்சி வேட்பாளர் மு.ஆலாலசுந்தரத்தைத் தோற்கடித்தார். தேர்தலைப் பகிஸ்கரித்த வாக்காளர்கள் தொகை சுமார் 3500 பேர்) எனக் கற்றஞ்சாட்டிய தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் சிலர், எமது கட்சிக் காரியாலயத்தின் முன்னால் எமக்கு எதிராக ஒரு ஆர்;பாட்டத்தை நடாத்திவிட்டுச் சென்றார்கள்.

கிளிநொச்சி விவசாயிகள் மத்தியிலான எமது வெகுஜன வேலைகளில் இது ஒரு காலகட்டம். ஆனால் எமது கட்சியின் பிரதான நோக்கம், தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி, அங்கு ஒரு சோசலிச சமூகத்தை நிறுவுவது என்ற உயர்ந்த இலட்சியத்தைக் கொண்டிருந்தது. அத்துடன் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது பாராளுமன்றத் தேர்தல்களின் ஊடாகவோ அல்லது வேறு சமாதான வழிகளிலோ சாத்தியப்படாத ஒன்று எனவும் கட்சி கருதியிருந்தது.

இந்த நிலைமையில் கட்சியின் பொதுச் செயலாளர் சண்முகதாசனையே தனதும் பொதுச் செயலாளராகவும் கொண்டிருந்த, எமது கட்சி தலைமையிலான இலங்கையின் மிகப் பெரிய தொழிற்சங்க மையமான இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் வேலைகளால் மட்டும், கட்சி தனது அதிகாரத்தைக் கைப்பற்றும் இலட்சியத்தை அடைய முடியுமா என்ற விமர்சனம் கட்சிக்குள் தீவிரமான விவாதப் பொருளாகி இருந்தது. தொழிற்சங்கவாத சீர்திருத்த வேலைகளைக் கைவிட்டுவிட்டு, கட்சி புரட்சிகரமான வேலைகளிலும், தயாரிப்புகளிலும் ஈடுபட வேண்டும் எனப் பெரும்பாலான கட்சி அங்கத்தவர்கள் வலியுறுத்தி வந்தனர்.

இந்தக் கருத்தோட்டத்தின் தாக்கம், எமது கிளிநொச்சிப் பிரதேசத்திலும் எதிரொலித்தது. சாதாரண சீர்திருத்தப் பாணியிலான விவசாயிகள் சங்க வேலைகளால் பிரயோசனம் இல்லை, எனவே நாம் புரட்சிகரப் பாணியிலான வேலையைக் கைக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனை தோழர்கள் மத்தியில் உருவானது. அதற்கு உரமூட்டும் வகையில் இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் சிலிகுரி மாவட்டத்தின் நச்சல்பாரிக் கிராமத்தில் 1966இல் தோழர்கள் சாருமஜூம்தார், கனுசன்யால், சுரன்போஸ் ஆகியோர் தலைமையில் வெடித்தெழுந்த விவசாயிகளின் கிளர்ச்சி அமைந்தது. (இந்தக் கிளர்ச்சியை அந்த நேரத்தில் சீனா, 'இந்திய வானத்தில் வசந்தத்தின் இடி முழக்கம்' என வர்ணித்தது)

எமது கிளிநொச்சித் தோழர்களில் சிலர், ஆயுதங்களைச் சேகரிக்க வேண்டும் எனவும், பொலிஸ் நிலையங்களைத் தாக்கி கிளிநொச்சிப் பிரதேசத்தை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, அங்கு சீனாவில் யெனானில் உருவாக்கியது போன்ற செந்தளப் பிரதேசத்தை உருவாக்க வேண்டும் எனவும் பேசத் தொடங்கினர். இந்தச் சூழ்நிலையில்தான், எமது அக்கிராயன் - கோணாவில் அரசியல் பயிற்சி முகாம் அமைக்கப்பட்டது.

இந்த முகாமில் வழங்கப்பட்ட அரசியல் பயிற்சியின் சாராம்சம், ஒரு பக்கத்தில் கட்சியில் சண்முகதாசன் தலைமையில் நிலவிய சீர்திருத்தவாதத்தை விமர்ச்சித்து நிராகரிப்பதாகவும், மறுபக்கத்தில் புத்தகவாத ரீதியில் சீனப்புரட்சி மாதிரிகளையோ அல்லது இந்திய நக்சல்பாரி எழுச்சியின் தாக்கத்தையோ பின்பற்றுவதாக இல்லாமல், எமது கள நிலைமைகளை ஸ்தூலமாக ஆராய்வதன் மூலம், எமது அரசியல் வேலைகளை முன்னெடுப்பதாக இருக்க வேண்டும் என்பதை, எமது ஊழியர்களுக்குப் பயிற்றுவிப்பதாகவும் இருந்தது. இது ஒரு மிகச் சரியான நிலைப்பாடு என்பதை, எமது சுமார் 40 வருட அனுபவங்களும், புலிகள் உட்படப் பல்வேறு தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்களின் தோல்விகளும் நிரூபித்துள்ளன என நினைக்கிறேன்.

இந்த எமது இரண்டாவது காலகட்ட வேலை முறைகளின் போது, யாழ்.குடாநாட்டிலிருந்தும், கிளிநொச்சிக் குடியேற்றக் கிராமங்களிலிருந்தும் ஏராளமான இளைஞர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு அரசியல் பயிற்சி வழங்கப்பட்டு, அவர்கள் முழுநேரக் கட்சி ஊழியர்கள் உருவாக்கப்பட்டார்கள். அவர்கள் மிகுந்த அரசியல் தெளிவுடனும், சொந்தக்காலில் நின்று மக்கள் மத்தியில் அரசியல் வேலைகளை முன்னெடுக்கும் தைரியத்துடனும், மக்கள் ஊழியர்களாக வளர்ந்தனர். அந்த மகத்தான மக்கள் தொண்டர்கள் கடந்த சில நாட்களாக ஒவ்வொருவராக புலிகளால் சிறை பிடிக்கப்பட்டு வருவதைப்; பார்த்த பொழுது, புலிகள் எமது எதிர்கால நம்பிக்கை நட்சத்திரங்கள் மீது கைவைக்க ஆரம்பித்து விட்டார்களோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது.

இதோ இப்பொழுது அவர்களில் அடுத்ததாக தோழர் கதிர்காமநாதன் இழுத்து வரப்பட்டிருக்கிறார்.

தொடரும்

முன்னைய பதிவுகள்